தி இந்து
10/06/2019

அரசு கல்வியியல் கல்லூரிகளில்

# பி.எட். மாணவர் சேர்க்கையை முன்கூட்டியே நடத்த வலியுறுத்தல்

● மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதில் தாமதம்

கோவை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் பி.எட். படிப்புக்கான மாணவர் சேர்க்கையை முன்கூட்டியே நடத்த வலியுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதில் தாமதம் ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் கீழ் மாநிலத்தில் 24 அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகள், 600-க்கும் மேற்பட்ட தனியார் சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இரண்டாண்டு பி.எட். மற்றும் எம்.எட். படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்படிப்புகளுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாநில அளவில் பொது கலந்தாய்வு அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. தனியார் சுயநிதி கல்லூரிகளைப் பொறுத்தவரை அந்தந்த கல்லூரிகளே மாணவர் சேர்க்கை நடத்தி கொள்கின்றன.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை தாமதமாக நடைபெறுவதால் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பறிபோவதாக குற்றம்சாட்டுகின்றனர், பாதிக்கப்பட்டவர்கள்.

இது குறித்து தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் சங்க பொருளாளர் ஏ.மனோகரன் கூறியதாவது: தமிழகத்தில் செயல்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு ஜூலை மாதத்தில் கலந்தாய்வு நடத்தி, ஆகஸ்ட் மாதத்தில் வகுப்புகள் தொடங்கப்படுகின்றன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் தேர்வு முடிவு வெளியாகிறது. அதாவது கல்வி ஆண்டு தொடங்கி இரு மாதங்கள் கழித்து முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

இதனால் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் அடுத்த கல்வியாண்டு வரை வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது.

மாணவர் சேர்க்கையை முன்கூட்டியே நடத்தி, தேர்வுகளையும் முன்கூட்டியே நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிட்டால் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதும் எளிதாக இருக்கும். எனவே 2019-2020-ம் கல்வியாண்டுக்கான பி.எட். படிப்பு மாணவர் சேர்க்கையை இம்மாத இறுதியில் நடத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.